தேதி: 21-04-2022

O.S. No. 389/2014

பி.வ.சா.1 திரு.எல்லத்துரை

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை:

1991-ம் ஆண்டு ஏப்ரல் 14-ல் பிறந்தேன். அதற்கு சான்றிதழ் உள்ளது. நீங்கள் உங்கள் வயதை அதிகமாக குறிப்பிட்டு பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுடைய பிறப்பு சான்று இவ்வழக்கில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரி. கருப்பண விருதுள்ளார் எழுதி வைத்த உயிலை படித்திருக்கிறேன். பொருமாள் விருதுள்ளார், காளியப்ப விருதுள்ளார், முத்து விருதுள்ளார், பச்சை விருதுள்ளார் ஆகியோர் கருப்பண விருதுள்ளாரின் மகன்கள் என்றால் சரி. கருப்ப விருதுள்ளாருக்கு பாப்பு (எ) கருப்பாயம்மாள், மாரியாயிஅம்மாள் ஆகியோர் பெண் மக்கள் என்றால் சரி. கருப்பண விருதுள்ளாருக்கு நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் சரி. அவருக்கு நிறைய கடன்களும் இருந்தது. சொத்தையும், கடன்களையும் பிரித்து கொடுத்துவிட்டார் என்றால் கடன்களை ஆண் வாரிசுகள் மட்டும் எடுத்துக்கொண்டு அதை திருப்பி செலுத்திவிட்டு ஆண் வாரிசுகளை அந்த இடத்தை வைத்துக்கொள்ளலாம் என்று பேசிக்கொண்டார்கள். அவ்வாறு பேசிக்கொண்டதாக உயில் எழுதப்பட்டதா என்றால் இல்லை. நீங்கள் பெண்களுக்கு கடன் பொறுப்பு கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு, பெண் வாரிசுகளுக்கும் கடனை அடைக்கும் பொறுப்பை பிரித்து கொடுத்துள்ளார் என்று உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது சரி, ஆனால் கடனை ஆண்கள் மட்டும் தான் அடைத்தார்கள், அடைத்ததற்காக வீட்டடி இடமான 46 செண்ட் நிலத்தை ஆண்களுக்கு கொடுத்துவிட்டார்கள். இந்த 46 செண்ட் நிலத்தையும் சேர்த்து சர்வே எண். 611/8-ல் மொத்தம் 92 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரி. அதில் காலி இடமும், வீடும் 46 செண்டில் உள்ளது என்றால் சரி. அது போக மீதியுள்ள 46 செண்ட் நிலத்தை முத்து விருதுள்ளார் என்ற மகனுக்கு உங்கள் தாத்தா உயில் எழுதிகொடுத்துவிட்டார் என்றால் சரி. வழக்கு தாக்கல் செய்யும்போது கருப்பண விருதுள்ளாரின் வாரிசுகள் 6 பேரும் இறந்துவிட்டார் என்றால் சரி. முத்து விருதுள்ளாருக்கு ஒரே மகள் காளியம்மாள் வாரிசு என்றால் சரி. 46 செண்ட் நிலம் முத்து விருதுள்ளாரின் மகள் காளியம்மாளின் அனுபவத்தில் இருக்கிறது என்றால் சரியல்ல, அது பொது அனுபவத்தில் உள்ளது. தென்புறம் உள்ள 46 செண்ட் நிலம் தான் பொது

அனுபவத்தில் உள்ளது என்றும், வடபுறமுள்ள 46 செண்ட் காளியம்மாள் அனுபவத்தில் உள்ளது என்றும், அவருடைய தனிப்பட்ட சொத்து என்றும் சொன்னால் சரியல்ல. வடபுறமுள்ள 46 செண்ட் காளியம்மாளின் அனுபவத்தில் இல்லை என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. பெருமாள் விருதுள்ளாருக்கு ஒரே மகள் சுப்புலட்சுமி மட்டும் தான் வாரிசு என்றால் சரி. சுப்புலட்சுமியின் கணவர் காளியப்பன் என்றால் சரி. அவர் இறந்துபோன கருப்பண விருதுள்ளாரின் மகள் மாரியாயியின் ஒரே மகன் என்றால் சரி. காளியப்ப விருதுள்ளாருக்கு 3 மகன்கள் சண்முகம், மாரியப்பன், உங்களது தகப்பனார் ஆறுமுகம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரி, அவர்கள் தவிர நாகலட்சுமி, அன்னகாமு ஆகியோரும் வாரிசுகள். காளியப்ப விருதுள்ளாரின் வாரிசுகள் அனைவரும் இருக்கிறார்களா என்றால் ஆறுமுகம் காலமாகிவிட்டார் அவரை தவிர எல்லோரும் இருக்கிறார்கள். எதிர் வாதத்தில் உங்கள் தாத்தாவிற்கு இரண்டு மகள்கள் வாரிசுகளாக இருக்கிறார்கள் என்று கூறவில்லை என்றால் சரியல்ல கூறியுள்ளோம். பச்சை விருதுள்ளாருக்கு விஜயலட்சுமி, காளியம்மாள், அமிர்தம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரி. மூவரும் உயிருடன் இருக்கிறார்கள். காளியம்மாளின் கணவர் தண்டபாணி என்றால் சரி. அமிர்தத்தின் கணவர் துரையப்பன். பாப்பு (எ) கருப்பாயம்மாள், அவரது கணவர் ராமுநாடாள்வார் காலமாகிவிட்டாகள் என்றால் சரி. அவர்களுக்கு தண்டபாணி, துரையப்பன், சந்தனதுரை, மாரியப்பன், ஈஸ்வரன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரி, அவர்களை தவிர ரஞ்சிதம் என்ற மகளும் வாரிசு தான். ரஞ்சிதம் பாப்பு (எ) கருப்பாயம்மாளின் வாரிசு என்று எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கருப்பண விருதுள்ளார் காலமாகி பல ஆண்டுகளுக்கு பிறகு தான் நீங்கள் பிறந்தீர்கள் என்றால் சரி. கருப்பண விருதுள்ளாரின் ஆண் வாரிசு தான் அவருக்கு இறுதி காரியங்கள் செய்து அவருடைய சொத்தை அடைந்து கொள்ளவேண்டும் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் கருப்பண விருதுள்ளாரின் 3 மகன்களுக்கு ஆண் வாரிசுகள் இல்லை, எனவே அவருடைய மகன்கள் அனைவருக்கும் ஆண் வாரிசுகளில் ஆண் வாரிசாக யார் இறுதி காரியங்கள் செய்கிறார்களோ அவருக்கு சொத்துக்கள் அடையவேண்டும் என்று கருப்பண விருதுள்ளாரின் காலத்தில் பேசப்பட்டது. கருப்பண விருதுள்ளார் உயிருடன் இருந்த காலத்தில் நடந்த பேச்சுவார்த்தை குறித்து அவர் இறந்த பல ஆண்டுகள் கழித்து பிறந்த நீங்கள் பேச்சுவார்த்தை நடந்தது பற்றி சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல.

கருப்பண விருதுள்ளாரிடம் நீங்கள் கூறுவது போல் இறுதி காரியங்கள் செய்யும் ஆண் வாரிசுக்கு சொத்துக்கள் சென்றடையவேண்டும் என்று ஆதாரம் உள்ளதா என்றால் அப்போது இருந்த குடும்ப சூழலில் ஒற்றுமையாக இருந்தார்கள், அதனால் எழுதிக்கொள்ளவில்லை. உயிலில் அதுபோன்ற வாசகங்கள் உள்ளதா என்றால் தெரியாது. 1969-ம் ஆண்டு வழக்கு சொத்தான 46 சென்டை நீங்கள் அடைந்து அனுபவம் செய்வதாக வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. 46 சென்டில் 20 செண்ட் அளவில் பெரிய வீடு இருந்தது என்றால் எனக்கு விபரம் தெரியும் போது இடிந்திருந்தது. 46 சென்டில் தற்போதும் சுமார் 30 செண்ட் நிலம் காலிஇடமாக உள்ளது என்றால் பழைய இடிந்த வீடுகள் உள்ளது, 30 செண்ட் நிலம் காலி இடம் இல்லை. காலி இடம் எவ்வளவு இருக்கிறது என்றால் அதை குறிப்பிட்டு கூற இயலாது. 46 சென்டில் சுமார் 7 சென்டில் உள்ள கொற்றத்தில் காளியம்மாள் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை. இடிந்த வீட்டில் ஒரு சுவரை ஆதாரமாக வைத்து அதன் ஒரு பகுதியில் சாய்பு இறக்கி குடியிருக்கிறீர்கள் என்றால் மாடு கட்டுவதற்காக அவ்வாறு செய்துள்ளேன். நீங்கள் தற்போது எங்கு குடியிருக்கிறீர்கள் என்றால் 46 சென்டில் ஒரு பகுதியில் குடியிருக்கிறேன். குறிப்பிட்டு எத்தனை சென்டு நிலத்தில் குடியிருக்கிறீர்கள் என்றால் 46 சென்டில் என்னுடைய மாடு மட்டுமே கட்டி அனுபவித்து வருகிறேன், வேறு யாரும் குடியிருக்கவில்லை. 2 பெரியப்பாவும் உங்களுடன் குடியிருக்கவில்லையா என்றால் நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம், அவர்களும் சேர்த்து தான் குடியிருப்பதாக சொல்கிறேன். 2 பெரியப்பாக்கள் வழக்கு சொத்தான 46 சென்டில் குடியிருக்கவில்லை வெளியில் குடியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது).

K HARIHARAN

Digitally signed by K HARIHARAN
Date: 2022.04.23 10:54:11 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**பழனி.**